# பத்திரிகைக் குறிப்பு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இளங்கலை மாணவர்களுக்கான பொதுப்பிரிவு மாணவர் சேர்க்கை (2020) இணையதள வாயிலாக 26.11.20 முதல் நடைபெற்று வருகிறது.

பெற்றோர் மற்றும் மாணவ மாணவியர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும், தற்போதுள்ள பருவநிலையை கருத்தில் கொண்டும் இன்று 01.12.20 மாலை 5.00 மணியுடன் முடிய இருந்த இணைதளவழி கலந்தாய்வு 3.12.2020 மாலை 5.00 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே விண்ணப்பித்திருந்த மாணவ மாணவியர்கள் தங்களது விருப்பப்பாடம் மற்றும் கல்லூரித் தேர்வில் மீண்டும் மாற்றம் செய்ய விரும்பினால் இந்த கால நீட்டிப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கல்லூரி முதன்மையர் மற்றும் மாணவர் சேர்க்கை தலைவர் முனைவர் மா.கல்யாணசுந்தரம் தெரிவித்தார்.

மேலும், இணையதளவழி கலந்தாய்வில் கலந்து கொண்டு தங்களது விருப்பப்பாடம் மற்றும் கல்லூரித் தேர்வினை உறுதி செய்த (Update Preference) மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, மீண்டும் அவர்களின் விருப்பத்தேர்வினை மாற்றியமைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.